Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 350 of 2017**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.39**

Defence

Court

| | |
|---|---|
| Name | திரு.கண்ணதாசன் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 5th day of March 2026.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 5th day of March 2026.**

**1,2,7,9,11,18,19,22 வழக்கு பிரிக்கப்பட்டது. 8, 12, 13 முதல் 15, 20, 21 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.**

**(சாட்சியை அரசு தரப்பு வழக்கறிஞர் அடையாளம் காட்டினார்)**

**முதல்விசாரணை**:

நான் தமிழக காவல் துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 2012 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றேன். நான் பண்ருட்டி வட்ட ஆய்வாளராக கடந்த 2001 ஆம் ஆண்டு பணியில் இருந்த போது கடந்த 30.11.2001 ஆம் தேதி காலை சுமார் 4.00 மணிக்கு பண்ருட்டி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்த வீரமுத்து மகன் சுப்பிரமணியன் என்பவர் வாக்குமூலம் பெற்றேன். (புகார்வாக்குமூலமாக இல்லாமல் கையொப்பம் இல்லாத 161 குவிமுச வின் கீழ் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலமாக உள்ளது). புதுபேட்டை காவல் நிலையம் வந்து குற்ற எண் 491/2001 பிரிவு 4(1)( i) , 4(1)(A), 307 இதசப்படி இந்த வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ 5 ஆகும்.** பின்பு விஷய சாராயம் அருந்தி இறந்ததாக அளித்த புகாரின் அடிப்படையில் கடலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை இறந்து போன சண்முகம் த.பெ மகாவிஷ்ணு என்பவரது பிரேதத்தை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன். **நான் செய்த சண்முகத்தின் பிரேதவிசாரணை அறிக்கை அதசாஆ 6 ஆகும்.** கடலூர் மருத்துவஅதிகாரிகள் பிரேத பரிசோதனை செய்து உடல்உறுப்புகளை சேகரித்து வைத்ததை பகுப்பாய்விற்கு அனுப்பி வைத்தேன். காலை 12.30 முதல் 14.30 மணி

வரை அய்யனார் த.பெ சேட்டு என்பவர் பிரேத விசாரணை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத பரிசோதனை மற்றும் உடல்உறுப்புகள் சேகரித்து வைக்க புதுப்பேட்டை காவல் நிலைய முதல் நிலை காவலர் தசரதன் என்பவர் மூலம் அனுப்பி வைத்தேன்.

மேலும் கடலூர் அரசு மருத்துவமனையில் இதே சம்பவம் குறித்து அதே தினம் இறந்து போன அய்யனார் த.பெ சேட்டு என்பவரது பிரேத்தின் மீது பகல்12.00 மணி முதல் மதியம் 02.00 மணி வரை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன். **நான் செய்த அய்யனார் பிரேதவிசாரணை அறிக்கை அதசாஆ 7 ஆகும்.** கடலூர் மருத்துவஅதிகாரிகள் பிரேத பரிசோதனை செய்து உடல்உறுப்புகளை சேகரித்து வைத்ததை பகுப்பாய்விற்கு அனுப்பி வைத்தேன். இக்குற்ற வழக்கின் விசாரணை அதிகாரியான திரு.P.குமரேசன், தற்போது பணி ஒய்வு பெற்று பல்லாவரத்தில் இருப்பதாக நான் கேள்விப்பட்டேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

சிகிச்சையில் இருந்த வீரமுத்து மகன் சுப்பிரமணியனிடம் புகார் வாக்குமூலம் பெற்ற சமயத்தில் அப்போது சிகிச்சை வழங்கிய மருத்துவரிடம் அவரது உடல் மற்றும் மனநிலை குறித்து எந்த ஒரு சான்றும் கையொப்பமும் பெறவில்லை என்றால் சரிதான். அவர் வாக்குமூலமாக கொடுத்ததை நான் எழுதி கொண்டேன் என்று சொன்னால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் வீரமுத்து மகன் சுப்பிரமணியனிடம் எந்தவொரு புகார்வாக்குமூலமும் வாங்கவில்லை

என்றாலும்  ஒரு பொய் புகார்  தயாரித்து ஒரு பொய் வழக்கு  பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*

*Sd/-G.Saraswathi*

*I Additional District  Judge*
*Cuddalore.*